RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt2422

OPEN ACCESS

# களப்பிரர் காலத்தில் துறவறமும் பெண்களும்

மூ. பாலசுப்பிரமணியன் [அ, *]

[அ] தமிழியல்துறை, அண்ணாமலைப் பல்கலைக்கழகம், அண்ணாமலை நகர், தமிழ்நாடு, இந்தியா.

# Asceticism and Women in the Age of Kalapirar

**M. Balasubramanian [a, *]**

[a] Department of Tamil Studies & Research, Annamalai University, Annamalai Nagar, Tamil Nadu, India

* Corresponding Author: nellaibaalaa@gmail.com

Received: 29-01-2024
Revised: 18-03-2024
Accepted: 26-03-2024
Published: 05-04-2024

Check for updates

## ABSTRACT

The Jain and Buddhist religious concepts that came to Tamil Nadu in the background of philosophy during the Sangam period were able to find a place in all the structural levels of the Tamil society. Religion, society, politics and culture have made their deep grip on all social institutions. Jain and Buddhist sages, who observed the corruptions in the society of Kalapirar's period, tried to reform their society morally through intuitions. They called the virtues of their religion as morals. Thus it is homeliness and asceticism that speak of individual morality and social morality. Emphasizing the theory of 'impermanence', the poets of Kalapirar's period have prioritized asceticism. They claim asceticism as the reverse of domesticity, but deny feminism. Although the role of women in Kalapirar's period was confined to the household, some took to asceticism as well. In that way, this article examines the asceticism and status of that time by taking the literature of Kalapirar's period as data.

**Keywords:** Jain, Buddhist, Kalapirar Period, Women

## முன்னுரை

சங்கம் மருவிய காலத்தில் மெய்யியலின் பின்னணியில் தமிழகத்துக்கு வந்து பரவிய சமண, பௌத்தச் சமயக்கருத்துக்கள் தமிழ்ச்சமூகத்தின் அனைத்துக் கட்டமைப்பு நிலையிலும் இடம் பெறலாயின. சமயம், சமூகம், அரசியல், பண்பாட்டியல் என அனைத்துச் சமூக நிறுவனங்களிலும் தனது ஆழ்ந்த பிடிமானத்தை ஏற்படுத்தின. களப்பிரர் காலச் சமூகத்தில் நிலவியச் சீர்கேடுகளை உற்றுநோக்கிய சமண, பௌத்ததுறவிகள், தங்களின் அறம் உணர்த்தும்கருத்துக்களின்வழிச் சமூகத்தைச் சீர்திருத்த முற்பட்டுள்ளனர். தங்களின் சமயம் சார்ந்த நீதிநெறிகளை அறமாகக்கூறினர். இங்ஙனம் தனிமனித ஒழுக்கத்தையும் சமுதாய ஒழுக்கத்தையும் பேசுவன இல்லறமும் துறவறமுமாகும். 'நிலையாமை' கோட்பாட்டை வலியுறுத்திய களப்பிரர் காலப் புலவர்கள் துறவறத்தை முதன்மைப்படுத்தியுள்ளனர். இல்லறத்தின் பின்னியக்கமாகத் துறவறத்தைக் கூறினாலும் பெண்துறவை மறுத்துள்ளன. களப்பிரர் காலத் துறவறத்தில் பெண்களின் பங்கு என்பது இல்லறத்தோடு நின்றுவிட்டாலும், சிலர் துறவறத்தையும் ஏற்றுள்ளனர். அந்த வகையில், களப்பிரர் கால அற இலக்கியங்களைத் தரவுகளாகக் கொண்டு அக்காலத் துறவறத்தையும் பெண்கள் நிலையையும் இக்கட்டுரை ஆராய்கின்றது.

## இல்லறமும் துறவறமும்

இல்லறத்தில் இருப்போர்க்குப் பல கடமைகளைக் கட்டமைத்துப் பேசும் அறஇலக்கியங்கள், துறவத்தையும் துறவறத்தாரையும் காப்பது இல்லறத்தின் கடன் என்று வலியுறுத்துகின்றன. ஏலாதி பாடலொன்று, துறவறம் மேற்கொள்ளாமல் இல்லறம் மேற்கொள்பவர்கள், துறவறத்தாரைக் காக்க வேண்டும் என்கிறது. அதனை,

"துறந்தார் கண்துன்னி, துறவார்க்கு இடுதல்

இறந்தார்க்கு இனிய இசைத்தல், இறந்தார்,

மறுதலை, சுற்றம், மதித்து ஓம்புவானேல்,

இறுதல் இல்வாழ் வேஇனிது" (ஏலாதி, பா. 16)

என்னும் பாடல்வழிப் பேசியுள்ளது. துறவு மேற்கொள்ளாமல் துறவு மேற்கொண்டவர்க்குக் உதவுதல் கடன் என்கிறது. இதனை வள்ளுவமும்,

"துறந்தார்க்கும், துவ்வாதவர்க்கும், இறந்தார்க்கும்

இல்வாழ்வான் என்பான் துணை." (குறள்., பா. 42)

என உரைத்துள்ளது. இல்லறத்தால் தோன்றிய துறவறம் பின்னர், இல்லறத்தையே 'நிலையில்லாதது' என்று குறைக்கூறியது. இல்லறம் தன்னலம் போற்றுவதால் சமூகத்தில் பொதுநலம் குறைந்து சமூகப் பிறழ்வுகள் நடக்கும் அதை எண்ணி துறவிகளும் அறிஞர்களும் இல்லறத்தாருக்குக் கடமைகளைச் சுட்டியுள்ளனர். குறிப்பாகப் பெண்களை மையப்படுத்தியே, அவர்களைக் குறைக்கூறியே அவ்வுரைகள் அமைந்துள்ளன. இல்லறத்தையும் இல்லறத்தாரையும் நெறிப்படுத்தித் துறவறத்திற்கு உதவுமாறு அவ்வுரைகள் உள்ளதை இங்கு நோக்க வேண்டும்.

## துறவறமும் பெண்களும்

இல்லறம் துன்பம் எனக்கூறும் துறவிகள், துறவறம் மேற்கொள்ள ஆண்களுக்கு அழைப்பு விடுப்பதைப் போல் பெண்களுக்கு அழைப்பு விடுக்கவில்லை. பெண்துறவறம் என்பது களப்பிரர் காலத்தில் மிகஅரிதான விடையமாக இருந்துள்ளது. புத்தர் தொடக்கக் காலத்தில் பெண்துறவை ஏற்கவில்லை. அதற்குப் புத்தர், 'உடல்சுமந்து புத்ததன்மையில் இருக்கும் நிலையில் ஒருபெண்மணி என் முன்னர்த் தியானத்திலோ சத்சங்கத்திலோ வந்துஅமர்ந்தால், எதிர்பாலினத்தின் காரணத்தினால் புத்ததன்மையை விட ஒரு ஆண்மகன் என்றவகையில் தான் அவள் கவரப்படுவாள்' என்று விளக்கமளித்துள்ளார். ஆனால், 'சங்கமித்ரா' என்ற முதல் பெண்துறவியை அவர் ஏற்கொண்டுள்ளார். அதனைத் தொடர்ந்து பல பெண்துறவிகள் இருந்துள்ளனர்.

சமணத்தில் குறிப்பாகத்தி கம்பரபிரிவில் பெண்களுக்கு, 'இந்தப் பிறவியில் முக்தி காண வாய்ப்புக்கிடையாது' என்றும், அவர்கள் மறுபடியும் ஆணாகப் பிறந்தால்தான் அந்தவாய்ப்பை அடைய முடியும் என்றும் கூறியுள்ளது. (Women in Jainism) இந்தியாவில் பல தொன்மையான ஆன்மீக மடங்கள் இன்றளவும் பெண்களுக்குத் துறவறம் வழங்குவதில்லை என்பது குறிப்பிடத்தக்கது. என்றாலும், 'மாதவி, மணிமேகலை, மீராபாய், அக்கா மகாதேவி, ஆண்டாள், மைத்ரேயி, கார்கி' போன்ற பெண்துறவிகள் பற்றிய வரலாறுகளும் இங்குண்டு. இங்ஙனம் பெண்துறவை மறுக்கும் சமயங்கள் இல்லறத்தில் இருக்கும் பெண்களைப் பால் அடிப்படையிலும், நடத்தை அடிப்படையிலும் கருத்துரைத்துள்ளன. அப்படிப் பெண்கள் குறித்து அற இலக்கியங்கள் கூறும் கருத்துக்களைக் காண்போம்.

## பெண்களுக்குள் பாகுபாடு

பெண்கள் ஆண்களுக்குக் கட்டுப்பட்டவர்களாக இருக்கவேண்டும் சொந்தவிருப்பு வெறுப்பின்றி ஆண்சமூகத்திற்கும் சமூகம்கட்டமைத்த விதிகளுக்கும் உட்பட்டு வாழவேண்டும் என்று அற இலக்கியங்கள் கூறியுள்ளன. இல்லறத்தில் குடும்பத்தின் தலைவனாக ஆண்கருதப்பட்டாலும், இல்லறத்தில் நடக்கும் நல்லது கெட்டதற்குப் பெண்களே காரணமாக்கப்பட்டுள்ளனர். விவரித்து எழுத முடியாத அளவிற்குப் பெண்கள் குறித்த கருத்துக்களை அறஇலக்கியங்கள் பதிவு செய்திருக்கின்றன. பரத்தையரைக் கண்டிக்கும் அவ்விலக்கியங்கள் இல்லறத்தரசியின்பால் ஒழுக்கத்தையும் கண்டித்துள்ளன. பிறப்பு முதல் இறப்புவரை ஆண்களைச் சார்ந்து வாழும்நிலையில், அடிமைகளாகவே களப்பிரர்காலப் பெண்கள் இருந்துள்ளனர் என்பது அறஇலக்கியங்கள் வழி அறியமுடிகின்றது. மேலும், நல்லபெண்யார்? கெட்டபெண்யார்? என்று இல்லறம் நடத்துவோரிலும் வேறுபாடு காட்டிப்பிரித்துள்ளனர். கணவனின் விருப்பத்திற்குத்தக்கவும், ஊராரின் கட்டுக்கோப்பிற்குள் வாழ்பவள் தான் சிறந்த பெண்ணரசி என்கிறது நாலடியார். அதனை,

“கட்குஇனியாள், காதலன்காதல் வகைபுனைவாள்

இட்குஉடையாள், ஊராண் இயல்பினாள், உட்கி

இடன் அறிந்துஊடி இனிதின் உணரும்

மடமொழிமாதராள் - பெண்” (நாலடி., கற்புடை மகளிர், பா.4)

என்னும் பாடலால் உணரலாம். கண்ணுக்கு இனியவளாகவும், கணவன் விரும்புமளவு தன்மை அலங்கரித்துக் கொள்பவளாகவும், அஞ்சம் உடையவளாகவும், ஊராரைக் கண்டு நாணம் கொள்பவளாகவும், கணவனுக்கு அஞ்சி ஊடலும் கூடலும் கொள்பவளாகவும் இருப்பவளே சிறந்த பெண்ணரசி என்று பெண்களை வேறுப்படுத்திக் காட்டுகின்றது அப்பாடல். இல்லறப்பெண்களிலும்நல்லவர்கெட்டவர்என்றபாகுபாடுத்திப் பெண்களையே பெண்களுக்கான எதிரியாகக் கட்டமைத்துள்ளனர். மேலும், பெண்களுக்காகக் கட்டமைத் தக்கருத்தியலுக்குத் தக்கவாறு நடந்து கொள்ள வலியுறுத்தப்பட்டுள்ளனர். களப்பிரர் காலப்பெண்களுக்குப் பலவிதிகளை அச்சமூகம் உருவாக்கி, அவ்வண்ணம் வாழக் கூறியுள்ளது இதனால் விளக்கம் பெறுகிறது.

## பெண்களுக்கானகற்பிதங்கள்

காலந்தோறும் பெண்களுக்கே கற்பு என்பது வலியுறுத்தப்பட்டு வருகிறது. இக்கருத்தியலை அறஇலக்கியங்கள் மிகுதியாகவே பேசியுள்ளன. கற்புடைய பெண்ணிற்கான இயல்புகளை,

“அரும்பெறல் கற்பின் அயிராணி அன்ன

பெரும்பெயர்ப் பெண்டிர் எனினும், விரும்பிப்

பெறுநசையால், பின்நிற்பார்இன்மையேபேணும்

நறுநுதலால் - நன்மைத்துணை” (மேலது., பா.381)

என நாலடியார் பேசுகின்றது. அருந்ததி போன்ற கற்புடைய மகளிரின் தோள்கள் வாழ்க்கைக்கு மருந்து என்கிறது திரிகடுகம். அதனை,

“அருந்ததிக் கற்பினார் தோளும், திருந்திய

தொல்குடியில் மாண்டார் தொடர்ச்சியும், சொல்லின்

அரில் அகற்றும் கேள்வியார் நட்பும், - இம்மூன்றும்

திரிகடுகம் போலும் மருந்து” (திரி., பா.1)

என்னும் பாடலால் பேசுகின்றது. இவ்வாறு பெண்களுக்கான கற்பு குறித்துப் பலபதிவுகளை அறஇலக்கியங்களில் காணமுடிகின்றது.

கற்பின் முக்கியத்துவத்தையும் சிறப்புகளையும் எடுத்துப் பேசியுள்ள அவ்விலக்கியங்கள், கற்புதவறும் பெண்களால் சமூகம் சீர்கெடும் என்றும் அதனால் பெண்களுக்கும்அவப்பெயர் என்றும் பேசுகின்றன. கற்பு நெறியில்லாமல், ஒருவனோடு வாழ்ந்து வேறு ஒருவனுக்குக் குழந்தை பெற்றெடுப்பவளை,

"அமர்விலங்கி, ஆற்றஅறியவும்பட்டார்

எமர், மேலைஇன்னரால், யார்க்குஉரைத்தும் என்று

தமர்மறையாக் கூழ்உண்டு சேறல்அதுவே

மகன்மறையாத் தாய் வாழுமாறு" (பழமொழி., பா.116)

எனப் பழமொழிநானூறு கண்டிக்கின்றது. மேலும், கற்பில்லாப் பெண்களுடன் வாழாமல் விலகி விடுவது இனிது என்கிறது இனியவைநாற்பது. கற்பு என்பது பெண்களுக்காக வலியுறுத்தப்பட்டாலும் அதனால் எழும் சமூகப்பிரச்சனையும் அலசி ஆராய்ந்துள்ள அறஇலக்கியங்கள், கற்பை வலியுறுத்துவதன் வாயிலாகப் பெண் அடிமைத்தனத்தையும் ஆணாதிக்கத்தையும் சமூகத்தில் ஒருசேர கொண்டுவர முயன்றுள்ளன எனலாம்.

## பாதிக்கப்பட்டப் பெண்களைக் காப்பது பெண்களே

களப்பிரர்காலத்தில் அடிமைப்படுத்தப்பட்டப் பெண்களுக்குப் பலவிதிகளை அச்சமூகம் உருவாக்கியுள்ளது. பெண்களுக்கான பாதுகாப்புக் குறித்தும் அவர்களை மதிப்பது குறித்தும் சிற்சில அற இலக்கியப் பாடல்கள் பேசினாலும் பெரும்பான்மை அவர்கள் ஆணாதிக்கச் சமூகத்திற்கு எப்படிக் கட்டுப்பட்டு நடக்க வேண்டும் என்பதிலேயே குறியாக இருந்துள்ளன. பெண்கள் குடும்பத்தில் எப்படி நடந்து கொள்ளவேண்டும், யாருக்கெல்லாம் மதிப்பளித்து நடக்கவேண்டும் என்பன போன்ற கருத்துக்களைத் தாங்கிய பாடல்கள்தான் மிகுதியாகக் காணப்படுகின்றன. பெண்களைக் காப்பவர்கள் யார்யார்? எனப் பட்டியலிடும் சிறுபஞ்சமூலம் அதனை,

"கொண்டான்கொழுநன், உடன்பிறந்தான், தன்மாமன்,

வண்டுஆர் பூந்தொங்கல் மகன், தந்தை, - வண்தாராய்!

யாப்புஆர் பூங்கோதை அணிஇழையை, நற்குஇயையக்

காப்பர், கருதும் இடத்து." (சிறுபஞ்ச., பா.52)

என்னும் பாடலால் கூறுகின்றது. இதனால், பெண்கள் பிறப்பு முதல் இறப்புவரை ஆண்களின் பாதுகாப்பிலேயே அவர்களின் எதிர்ப்பார்ப்புகளுக்கு ஏற்பவே வாழவேண்டும் என்று கருதியுள்ளமை அறிய வருகிறது. பெண்களைப் பாதுகாப்பவர்கள் என்றுபட்டியல் கொடுத்துள்ள சிறுபஞ்சமூலம் மற்றொரு பாடலில் பாதிக்கப்பட்டப் பெண்களைப் பெண்கள் தான் பாதுகாத்திட வேண்டும் என்றும் அது அறங்களிலெல்லாம் பேரறமாகும் என்றும் கூறியுள்ளது.

"ஈன்றுஎடுத்தல், சூல்புறஞ்செய்தல், குழவியை

ஏன்றுஎடுத்தல், சூல்ஏற்றகன்னியை, ஆன்ற

அழிந்தாளை, இல்வைத்தல் - பேர்அறமாஆற்ற

மொழிந்தார், முதுநூலார், முன்பு" (மேலது., பா.70)

என்னும் பாடல் குழந்தையைப் பெற்று வளர்த்தல், கருவுற்ற சூலியைப் பேணுதல், அநாதைக் குழந்தையை எடுத்துவளர்த்தல், திருமணமாகாமல் ஏமாந்து சூலுள்ள கன்னியையும், கணவனால் கைவிடப்பட்டவரையும் வைத்துப் பாதுகாப்பது பெண்களின் பொறுப்பு என்கிறது.

இல்லறத்தில் ஆண்களுக்குக் கட்டுப்பட்டு வாழ்பவர்களைக் காக்கும் ஆண்களின் பட்டியலையும், பாதிக்கப்படும் பெண்களைப் பெண்களே பாதுகாக்கவேண்டும் என்று அதற்கான பட்டியலையும் தனித்தனித் தந்துள்ள சிறுபஞ்சமூலச் செய்தியின் வழி அக்காலத்தின் பெண்களின் நிலையை அறிய முடிகிறது.

## ஆண்களும் பெண்களும்

இல்லறத்தில் பெண்களுக்குப் பல கட்டுப்பாடுகளை விதிகளையும் வகுத்தளித்த துறவறத்தார் ஆண்களுக்கு அந்தளவிற்கு வலியுறுத்தவில்லை. அவர்களுக்கான சமூகக்கடமைகள், பிறன்மனை நோக்காமை போன்ற செய்திகள்தான் பேசப்பட்டுள்ளன. பெண்களிடம் காட்டும் கடுமை ஆண்களிடம் காட்டப்படவில்லை. சிறந்த ஆண்மகனாக நல்ல வாழ்க்கை வாழ்பவன் யார்? என்று ஒருபட்டியலைத் தருகிறது ஏலாதி. அதில் பெண்களுக்கு உரைத்தைப் போல் அறக்கடமைகளைப் பேசாமல் அவனின் சிறந்த வாழ்க்கைக்கான அளவுகளைப் பேசியுள்ளது. அப்பாடல்,

"உண்ணீர் வளம் குளம் கூவல் வழிப்புரை
தண்ணீரைஅம்பலந்தான் பாற்படுத்தான் - பண்ணீர
பாடலோ(டு) ஆடல் பயின்றுயிர் செல்வானாய்க்
கூடலொ(டு) ஊடலுளான் கூர்ந்து" (ஏலாதி, பா.51)

என நல்வாழ்வு வாழ்பவனின் வசதிகளைப் பட்டியலிட்டுள்ளது. பருகுவதற்குக் குளம், கிணறு முதலானநீர்நிலைகள், வழிப்போக்கர் தங்குவதற்கு வாய்ப்பாக இலைக் குடில்கள், தண்ணீர்ப்பந்தல்கள், அம்பலங்கள் ஆகியவற்றை அமைப்பவன் மிகுந்த செல்வம் பெருகுபவனாகவும், பண்ணோடு கலந்த பாடலையும் ஆடலையும் கேட்டு அனுபவிக்க வாய்ப்புள்ளவனாகவும், தன் மனைவியுடன் ஊடலும், கூடலும் பெற்ற இன்புற்றவனாகவும் உள்ளவன் இனிதே வாழ்பவன் என்கிறது அப்பாடல். அதேசமயம் நல்ல வாழ்க்கை வாழும் பெண்கள் யார்? என்று சிறுபஞ்சமூலம் ஒருபட்டியலைத் தந்துள்ளது.

"வருவாய்க்குத் தக்க வழக்கறிந்து சுற்றம்
வெருவாமை வீழ்ந்து விருந்தோம்பித்-திருவாக்குந்
தெய்வதையு மெஞ்ஞான்றுந்தேற்றவழிபாடு
செய்வதே பெண்டிர் சிறப்பு." (சிறுபஞ்ச., பா.42)

என்னும் இப்பாடல் கணவனின்வருவாய்க்குத்தக்கவாறுசெலவுசெய்து, சுற்றத்தார் அஞ்சி விலக்காமல் அணைத்துக்கொண்டு, விருந்தோம்பி, செல்வத்தைத் தருகின்ற தெய்வத்தை வழிபட்டு வாழ்வதே சிறந்த பெண்டிரின் வாழ்க்கை எனப் பேசுகின்றது. சமூகத்தில் பெண்களுக்கும் ஆண்களுக்கும் கடமைகளையும் விதிகளையும் ஒரே அளவில் கட்டமைக்காமல் பாகுபாட்டுடன் அறஇலக்கியவாதிகள் கட்டமைத்துள்ளனர். இதன்வழித் துறவறத்தார் இல்லறத்திலுள்ள பெண்களிடம் நடுநிலையோடு நடக்கவில்லை என்பது தெரிகிறது.

## முடிவுரை

இல்லறத்தைத் துறவறததைப் பாதுக்காக்கும் இடமாகக் கட்டமைத்து, இல்லறத்திலுள்ள ஆண் பெண் உறுப்பினர்களுக்கு அறங்கள் என்னும் பெயரில் கடமைகளை அறஇலக்கியங்கள் வலியுறுத்தியுள்ளன. இல்லறம் துறவறத்திற்கான தோற்றுவாய் என்பதை நம்பும் துறவறத்தார், இல்லறம் துன்பங்கள் நிறைந்த ஒன்று என்றும், இல்லறம் நிலையில்லாதது என்றும், இல்லறத்தார் துறவறத்தாரைக் காக்க வேண்டும் என்றும் பேசியுள்ளனர். துறவறத்தார்

இல்லறத்திலுள்ள ஆண், பெண்களுக்கான கடமைகளைப் பேசுமிடங்களிலும் வேறுபாடு காட்டியுள்ளனர். ஆணாதிக்கத்தால் அடிமைகளாக இருந்த களப்பிரர் காலப் பெண்களைத் துறவறம் பேசும் அற இலக்கியங்களும் கற்பிதங்களால் காயப்படுத்தியுள்ளன.

## References


அறவாணன், க.ப., (2008) அறஇலக்கியக் களஞ்சியம், சென்னை, தமிழ்க்கோட்டம்.

கதிர்முருகு, (2010) பிற்காலநீதி இலக்கிய வரலாறு, சென்னை, நாம் தமிழர் பதிப்பகம்.

கிருஷ்ணமூர்த்தி, ஜெ., (2000) சமூகவியல் கோட்பாடுகள், சிதம்பரம், அண்ணாமலைப் பல்கலைக்கழகம்.

தமிழ் மக்கள் வரலாறு, (2006) சென்னை, தமிழ்க்கோட்டம்.

பதினெண்கீழ்கணக்கு நூல்கள், (2006) சென்னை, மணிவாசகர் பதிப்பகம்.

வேலுப்பிள்ளை, ஆ., (2011) தமிழர் சம யவரலாறு, சென்னை, குமரன் புத்தக நிலையம்.


**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2024. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License